www.padippakam.com

# கதிரேசனின்
# சிறுவர் பாடல்கள்



படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# கதிரேசனின் சிறுவர் பாடல்கள்

ஆக்கியோன் :

கவிஞர் செ. கதிரேசர்பிள்ளை

வெளியீடு :

திருமதி பு. கதிரேசர்பிள்ளை



படிப்பகம்

www.padippakam.com

ஒரு முன்னுரை.....

"வயலருகே நின்ற பல தென்னைகளில் ஒன்று
புயலடித்து வட்டுவீழப் பட்டுப்போச்சு தின்று"

இங்கே "புயல்" என்பதை மாற்றி "ஷெல்" என்றே போட வேண்டிய காலகட்டத்தில் இந்தச் சிறுவர் மலர், தென்னைமரங்களே இல்லாத வடதுருவத்தில் வெளிவருவது..... தமிழ் நெஞ்சங்களை வேதனைப்படுத்தத்தான் செய்கிறது.

இந்தநூலுக்கு முன்னுரை எழுதும் தகுதியோ ஆற்றலோ என்னிடம் இல்லை. கவிஞர் கதிரேசனின் பரந்த ஆழமான தமிழறிவில் சிறு துளியேனும் எனக்கு இல்லை. எனவே முன்னுரை என்று இதற்கு பெயர் சொல்லாது நன்றியுரை என்பது பொருந்தும். இந்தக்கவிதைகள் 30 வருடங்களின் முன் எழுதப்பட்டவை. நான் சிறுவனாய் இருந்தபொழுது எனக்காகவே சில கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. அழகிய எளிய மெட்டுகளில் கவிஞர் என்னைத் தன் சைக்கிளில் ஏற்றிச்செல்லும் பொழுது பாடிய பாடல்களும் இந்நூலில் உண்டு. இன்று சிலவற்றை நான் என் மகனுக்குப் பாடிக்காட்டுகிறேன், காலத்தால் அழியாத இவற்றை பலரும் படித்துப் பயன் பெறட்டும் என்பதுவும், கவிஞரின் ஆத்மா சாந்தி அடையட்டும் என்பதுவுமே இந்நூல் உருப்பெறக் காரணங்களாகும்.

எனது பெருமதிப்பிற்குரிய ஆசிரியரும் தமிழுக்காகவே அன்றிலிருந்து இன்றுவரை உழைத்துக்கொண்டிருப்பவரும், தனது தமிழ்ப்பற்றாலும் உயரியபண்பினாலும் தன்னையே எங்கள் குடும்பத்துடன் இணைத்துக்கொண்டவருமான மயிலங்கூடலூர் பி. நடராசன் அவர்களது கடின உழைப்பு இல்லாதுவிட்டால் இக் கவிதைகளை தமிழ்கூறும் நல்லுலகம் இழந்துதானிருக்கும். தமிழ் உள்ளளவும் அவர் நாமம் வாழட்டும்.

இந்லூல் உருவாகப் பெரிதும் உதவிய கவிஞர் முல்லை -யூரானுக்கும், ஓவியங்கள் வரைந்த இனிய நண்பர் சௌந்தர் அவர்கட்கும், தம்மாலியன்ற உதவி புரிந்த ஏனைய அன்பு நெஞ்சங்களுக்கும் என்றும் என் நன்றிகள் பல.


இவண்,
க. ஆதவன்
(யாழ் - பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர்)
டென்மார்க்.

www.padippakam.com

இதுவரை
இறந்துபோன
ஈழத்து –
அப்பாவிச்
சிறுவர்களுக்கு
இந்நூல்
சமர்ப்பணம்.


படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com

# வண்ணத்துப்பூச்சி

வண்ண வண்ண பூச்சி
வண்ணத்துப் பூச்சி
கண்ணுக்கழகான
காட்சிதரும் பூச்சி

***

பட்டுத் துணி மீது
பஞ்சவர்ணத் தாலே
பொட்டிட்டது போலே
போர்வை கொண்ட பூச்சி

***

வீசிச்சிற காட்டி
மின்னலொளி கூட்டித்
தேசதேச மெல்லாம்
சென்று வரும் பூச்சி

***

பூநிறைந்த சோலை
புல்வெளிக ளூடே
தேனிருக்கும் பூவைத்
தேடிச்செல்லும் பூச்சி

***

வண்ணமலர் மீது
வந்தமர்ந்து வேறோர்
வண்ணமலர் போலே
மாறிநிற்கும் பூச்சி

***

ஓடிப்பறந் தெங்கும்
ஓய்தலின்றி ஊக்கம்
கூடியுழைக் கின்ற
கோலவண்ணப் பூச்சி

***

பூவை வருத்தாமல்
போயமர்ந்து தேனை
நாவினிக்கக் கொள்ளும்
நாகரிகப் பூச்சி


படிப்பகம்

www.padippakam.com

உண்மையொன்று கண்டோம்
ஊக்கத்திறம் கண்டோம்
வண்ணப்பூச்சி நன்றே
வாழ்ந்திடுவோம் இன்றே

***

வண்ணப் பூச்சி போலே
வாழ்ந்திடுதல் வேண்டும்
எண்ணமிருந் தென்ன
இறக்கையெமக் கில்லை

***



படிப்பகம்

www.padippakam.com

## விடிவெள்ளி

நள்ளிருள் போய்ச்சில நாளிகையும் சென்று
ஞாலமுற் றுந்துயில் கொள்ளுமொரு
கள்ளப் பொழுதினில் மெல்ல வெளிவரும்
காரணம் யாதுசொல் தாரகையே.

மையிருட் போர்வையுள் மேனிபுதைந் திந்த
வையக மங்கை துயில் வதனை
மெய்யுறக் கண்டு வியந்திடவோ இந்த
வேளை புகுந்தனை தாரகையே.

மிக்க எழில் பெறக் கோலம் புனைந்துவிண்
மீதினில் நீவரக் கண்டதுமே
தொக்கிருந்த நின்றன் தோழரெலாம்முகம்
சோர்ந்திடல் ஏனோசொல் தாரகையே.

ஆதவனேவிய தூதுவனோ அவன்
ஆட்சியின் வேளை யுணர்த்த வென
வீதியில் முன்னரே வந்தனையோ விடி
வெள்ளிப் பெயர்கொடு தாரகையே.

பொங்கிய பேரொளி யோடுநல் வாழ்விற்
பொலிந்து விளங்குநீ காலையிலே
மங்கி மெலிந்தனை வையக வாழ்க்கையின்
மாயம் உணர்த்தினை தாரகையே.

பொன்னொளி வீசிடுந் தாரகையே இருட்
போதில் உலாவரும் தாரகையே
மின்னற் கொடியினிற் பூத்த மிகப்பெரும்
வெண்மலராகிய தாரகையே.

வானக் கடலினில் ஆழத்திலே சென்று
வைகிய சிப்பி வயிற்றிடையே
மோனம் பயின்றொளி பெற்று வெளிவரும்
முத்தெனவோ உனைத் தாரகையே.

www.padippakam.com

# பூக்களும் பூமித்தாயும்

அபிநயப்பாடல்

## கொன்றை

கொன்றை யென்ற நாமங்கொண்டு
குதித்து வந்தேனே.
கோட்டுப் பூவின் குலத்தில் வந்து
குலுங்கி நின்றேனே.
தென்றல் வீசச் சிந்தும் மதுரத்
தேனுங் கொண்டேனே.
தேவர்பாத மீது தூவச்
சிறந்து நின்றேனே.

சின்னத் தம்பிப் புலவன் அன்று
சொன் தீந்தமிழ்க்
கன்னிக் கவியில் எய்தும் பெருமை
காண நின்றேனே.
பொன்னி னுண்டை மணிகள் கொண்டு
புனைந்து செண்டுபோல்
மன்னி ஓங்குந் தரு நிறைந்து
மலர்ந்து நின்றேனே.

## தாமரை

தாமரை என்று பேர் தாங்குவேன்-குளத்
தண்ணீரிலே வளர்ந் தோங்குவேன்
மாமலர் என்றெனைப் போற்றுவார்-திரு
வாழ்கின்ற பூவெனச் சாற்றுவார் .

மாயன் அருள்விழி யாகினேன்-எழில்
மாரன் விடுகணை யாகினேன்.
தூய சுடரொளி வீசியே-வரும்
சூரியன் காதலி யாகினேன்.

அண்ட சராசரம் ஆக்கினோன்-வைகும்
ஆசனமாய் புகழ் தேக்கினேன்.
வண்டமிழ்ப் பாவலர் நாவிலே-என்போல்
வாழ்த்தெவர் பெற்றனர் பூவிலே.

சொல்லும் பெயர்பல சூடினோம்-ஒளிச்
சூரியன் காதலி யாகினோம்.
வல்ல புலவர்கள் நாவிலே-என்றும்
வாழ்த்தெவர் பெற்றனர் பூவிலே.


படிப்பகம்

www.padippakam.com

## மல்லிகை

மல்லிகை என்ற பெயர் கொண்டோம்
மாறா வெண்மை நிறம் கொண்டோம்
கொல்லையில் பந்தல்மீ தேறி
கொடியை நிறைத்தே மலர்ந்திடுவோம்.
வாசனை வீசும் மலருள்ளே
மதிப்பால் உயர்ந்து வாழ்ந்திடுவோம்.
ஈசன் அணியும் மாலைகளாய்
இசைந்தே இன்பம் பெற்றிடுவோம்.

## றோசா

நாடும் மலர்களில் ராஜா-எங்கள்
நாமம் ரோஜா றோஜா
பாரீர் இதழ்களின் மென்மை-அதிற்
படரும் செம்மையின் வெண்மை

யார்தான் ஆசைப் பாடாதார்-எம்மை
யார்தான் அணுகித் தொடாதார்
வாசனை வீசுவதாலே-எங்கள்
வண்ணம் ஒளிர்வதனாலே
தேசம் முழுவதும் நாமே-மலரின்
செல்வம் எனத்திகழ்வோமே.

## பூமித்தாய்

பூமித் தாயின் புன்னகை போல்
பூத்த மலர்களே-இங்கு
பூத்த மலர்களே.

தீமை காட்டி வீம்பு பேசித்
திரிவது நன்றோ-நீங்கள்
திரிவது நன்றோ.

சாமி சூடும் மாலைகளிற்
சார்ந்து வாழுவீர்.
நாமெல்லோரும் ஒன்று கூடி
நன்மை கூறுவோம்.



படிப்பகம்

www.padippakam.com

# சுகாதார வாழ்வில் அன்னை

1

தேசநலம் நோயில்லாத வாழ்வில் நேருமே-அது
தேககிடத் தாலெமக்கு வந்து சேருமே
பேசுதிடம் தாயர்தரப் பேணலாகுமே-இந்தப்
பேச்சிலெங்கள் தாயின்வாழ்வு காணலாகுமே.

2

மக்கள்திடம் கொண்டுவாழ்தல் வேண்டுமென்பதே-பெற்ற
மாதின்மனம் நாடிநிற்கும் தாயினன்பதே
தக்கசுகா தாரவழி தாய்க்கு வேண்டுமே-அது
தாக்கும் நோயைப் போக்கிக்காக்கும் நோக்கைத்தூண்டுமே.

3

சீவத்துச் சேர்ந்தபண்டம் தேடிக்கொள்ளுவாள்-அவை
சேதமுறாத வகையிற் பாகம் செய்து நல்குவாள்
தேவர்போல விழித்துக்காத்துச் சேவையாற்றுவாள்-பெற்ற
சேயின்துன்ப நோயைத்தீர்த்துச் தீமைமாற்றுவாள்.

4

வீட்டுள்நல்ல காற்றுமெல்ல வீசவைப்பாளே-என்றும்
வெந்தபானந் தந்துதுன்ப வேரறுப்பாளே
கூட்டிச்சுத்தஞ் செய்தழுக்கைப் போக்குவதாலே-அன்னை
கோடிகோடி கிருமிகொன்று நோய்குறைப்பாளே.

5

பாட்டிநாளின் மோட்டுக்கொள்கை கேட்டுத் தூற்றுவாள்-சின்னப்
பாலர்க்கேனும் அம்மைகாக்கப் பாலும் ஏற்றுவாள்
ஊட்டும்மாற்று மருந்தடுப்பு முறைகள் தேறியே-மனையின்
உட்புகாது தொற்றுநோய் ஓட்டிச் சீறுவாள்.

(சுகாதாரவிழா 17.05.1964)


படிப்பகம்

www.padippakam.com

# விண்ணரும் வீணரும்

1.

கண்ணன் நல்ல சிறுவன்-அன்பு
காட்டி நட்பு பெறுவான்.
எண்ணும் தோழர் சூழ-ஊரில்
எங்குஞ் சென்று வருவான்.

2.

பள்ளிக்கூடம் செல்வான்-கற்கும்
பாடம் நன்கு கொள்வான்.
துள்ளிப் பாய்தல் ஓடல்-யாவுஞ்
சோர்வி லாது செய்வான்.

3.

ஆர்வம் மிக்க சிறுவன்-கண்ணன்
அச்ச மேதும் அறியான்.
சோரும் தோழர்க் காக-என்றுந்
தோள்கொ டுத்து நிற்பான்.

4.

தூக்கும் பார மொன்றைத்-தூக்கச்
சூழ்ந்து நிற்பர் மற்றோர்
ஊக்கம் காட்டிச் செல்வான்-கண்ணன்
ஓடித் தூக்கி வெல்வான்.

5.

சேவை செய்து செய்து-தேகத்
திண்மை பெற்ற கண்ணன்
காவி யத்து வீமன்-போலக்
காட்சி தந்து நின்றான்.

6.

உருளை போன்ற தேகம்-செய்கை
ஊக்கம் யாவும் கண்டோர்
முரடன் என்று கண்ணன்-பேரை
முற்றும் மாற்றி விட்டார்.

7.

தேவை யான போதிற்-கண்ணன்
சேவை வேண்டி நின்றான்
நாவி னாலே முரடன்-என்று
நாண மின்றிச் சொன்னார்.


படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com

8

முரடன் என்று தன்னை-யாரும்
முன்னு ரைத்த போதும்
கரவி லாது கண்ணன்-பண்பு
காட்டி வாழ லானான்.

9.

நொந்து போகுந் தேகம்-என்று
நோக்கி நிற்ப தில்லை
எந்தச் செய்கை யேனும்-முன்வந்
தேற்று நின்று செய்வான்.

10.

ஓலைக் கூரை ஒன்றில்-ஓர்நாள்
ஓங்குந் தீயைக் கண்டு
சாலை ஓரம் நின்றோர்-அங்கு
தாவி ஓடிச் சென்றார்.

11.

சின்னப் பாலன் ஒருவன்-தீக்குட்
சிக்கிக் கொண்ட தாலே
அன்னை ஓல மிட்டே-கூவி
ஆவி சோர லானாள்.

12.

தீயின் கோர வேகம்-செய்யுந்
தீங்கை மிஞ்சி நின்று
தாயின் சோகம் கண்டோர்-நெஞ்சைத்
தாக்கித் தீய்த்த தம்மா.

13.

சூழ்ந்து நின்ற மாந்தர்-வீட்டைச்
சுற்றிச் சுற்றி வந்தார்
சார்ந்த தீயுட் செல்ல-அஞ்சித்
தத்த ளித்து நின்றார்.

14.

கண்ணன் ஓடி வந்தான்-அந்தக்
காட்சி யாவுங் கண்டான்
எண்ணிப் பார்க்க வில்லை-தீக்குள்
ஏறித் தாவிச் சென்றான்.


படிப்பகம்

15.

ஓடித் தீயை உதறி-வீட்டின்
உட்பு குந்து தேடி
வாடிச் சோர்ந்த சேயை-மீட்டு
வாரித் தூக்கி வந்தான்.

16.

தாவி மீண்டு வந்தான்-சேயைத்
தாயின் கையிற் தந்தான்
ஆவி காத்து நின்றான்-யாரும்
அவனைப் பார்த்து நின்றார்.

17.

கருணை யுள்ளம் கொண்டு-கண்ணன்
காட்டும் தீரம் கண்டு
முரடன் என்று சொன்னோர்-அங்கு
மூச்ச டங்கி நின்றார்.

18.

எண்ணுந் தீரம் இதனைக்-காட்ட
ஏங்கி நின்ற மற்றோர்
விண்ணன் கண்ணன் என்றார்-தம்மை
வீண ராகி நின்றார்.


படிப்பகம்

www.padippakam.com

## வாழ்வுதரும் வாழ்வு

வையக முய்திட வாழ்வளிக்கின்றவோர்
மாந்த ரினத்தவர் நாங்களம்மா
மெய்வியர்வு கொள்ள வேலைகள் செய்திந்த
மேதினி காப்பவர் நாங்களம்மா.
*

பூமி திருத்தியுண் என்றிடு பொன்மொழி
போற்றி யுழைப்பவர் நாங்களம்மா
சாமி துணையுடன் எங்கள் தொழில்முறை
சாற்றி யுணர்த்திட வந்தனமே.
*

ஏரதனில் மாடுகளைப் பூட்டி-வயலில்
ஈரமுள்ள போதவற்றை ஓட்டிப்
பாருழுது பண்படுத்து வோமே-உலகின்
ஆருயிர்க்கு வாழ்வுதர நாமே.
*

பாத்திசெய்து நீரிறைத்து நேற்று-பிடுங்கிச்
சேர்த்துமுடி கட்டிவைத்தோம் நாற்று
சேற்றிலந்த நாற்றுநடு வோமே-செந்நெல்
தேசமெங்கும் வாழ்வுதர நாமே.
*

ஆற்றிவிட்ட கூந்தலினைப் போலே-காற்றில்
ஆடியசைந் தோங்குபயிரூடே
தோற்றுபுல்லைச் சென்றுகளை வோமே-உயிர்க்குச்
சோறளித்து வாழ்வுதர நாமே.
*

பொன்னைப் போலப் பொலிந்து தோன்றும்
செந்நெற் கதிரைப் பார்த்திடுவோம்
அன்னைபூமி தன்னைநோக்கி
அவைகள் சாய்தல் பார்த்திடுவோம்.

**********



படிப்பகம்

www.padippakam.com



படிப்பகம்

www.padippakam.com

# பொந்திற் கிளியும் பூதனும்

1.
வயலருகே நின்றபல
தென்னைகளில் ஒன்று
புயலடித்து வட்டு வீழப்
பட்டுப் போச்சு தின்று.

2.
பட்டமரப் பொந்தினிலே
கூடமைத்துக் கொண்டு
முட்டையிட்டு வாழ்ந்தனவே
பச்சைக்கிளி ரண்டு.

3.
அந்தவழிச் சென்றபூதன்
பொந்திற் கிளி கண்டான்
அந்திவேளை வந்தவற்றைப்
பற்றமனங் கொண்டான்.

4.
ஆசையுடன் பூதனங்கு
மாலையிலே சென்றான்
ஓசையின்றி ஏறியந்தப்
பொந்தருகே நின்றான்.

5.
உள்ளிருந்து கிளியிறகு
கோதுமொலி கேட்டான்
துள்ளுமனத் தோடுகையைப்
பொந்தில் மெல்லப் போட்டான்.

6.
சத்தமின்றி பற்றவரும்
கையைக்கிளி கண்டு
கொத்திடவே பூதன்மிக
நொந்தலறிக் கொண்டு

7.
கையெடுத்த போதில்மற்றக்
கையின்பிடி நழுவ
பையனவன் வீழ்ந்துருண்டான்
மண்ணையுடல் தழுவ.

8.
ஓலக்குரல் கேட்டசிலர்
ஓடிவந்து பார்த்தார்
காலொடிந்த பூதன்நிலை
கண்டுவீட்டிற் சேர்த்தார்.


படிப்பகம்

www.padippakam.com

## அருவி வெட்டு

கூட்டமாகக் கூடியரிவி
வெட்டிக் குவித்துச் சேர்த்திடுவோம்
நீட்டியடுக்கி நின்றடித்து
நென்மணிகளைச் சேர்த்திடுவோம்.

***

வட்ட வடிவமாய்ச் சுற்றிப் பரப்பிய
வைக்கோலிலே பல மாடுகளை
விட்டு நடத்தி வளைத்திடுவோம் நெல்லு
வேறாகச் சூடு மிதித்திடுவோம்.

***

வீசி யடித்திடுங் காற்றினி லேயங்கு
மேவிக் குவிந்திடும் நெல்லையள்ளித்
தூசி யகன்றிடத் தூவிடுவோம் நின்று
தூற்றிடுவோம் மணி சேர்த்திடுவொம்.

***

புத்தம் புதியநெல் குற்றி யரிசியைப்
பொங்கலிட்டேயெங்கள் முன்றலிலே
வைத்துப்படைத்தொரு சூரிய தேவனை
வாழ்த்தி வணங்கி மகிழ்ந்திடுவோம்.

***

விண்ணுக் கொருமணி யாக விளங்கியெம்
கண்ணுக் கொளிதரும் சூரியனை
மண்ணுலகத் துயிர் நாயகனைப் போற்றி
மாமலர் தூவி வணங்கிடுவோம்.

***************

(நிறுவியவர் நினைவுநாள் 1957
மகாஜனாக்கல்லூரி,தெல்லிப்பளை)


படிப்பகம்


www.padippakam.com

# அம்மாவும் அப்பாவும்

காலையிலே எழுந்திரென்று அம்மாசொல்லுவா
கால்கைமுகம் கழுவச் சொல்லி அப்பா சொல்லுவார்.
கடவுள்பாதம் கும்பிடென்று அம்மா சொல்லுவா
கல்விப்பாடம் படிக்கச் சொல்லி அப்பா சொல்லுவார்.
உடம்பைத் தேய்த்துக் குளிக்கச் சொல்லிஅம்மா சொல்லுவா
உடையைத் தோய்த்து அணியச்சொல்லி அப்பாசொல்லுவார்
உணவிற்பங்கு கொடுத்துண் என்று அம்மா சொல்லுவா
ஒற்றுமையாய் பழகச் சொல்லி அப்பா சொல்லுவார்.
உண்மைபேசி வாழச்சொல்லி அம்மா சொல்லுவா
ஓடி ஆடிப் பாடச்சொல்லி அப்பா சொல்லுவார்.
அம்மா அப்பா இருவருந்தான் எங்கள் தெய்வமாம்
அவர்கள் சொல்லைக் கேட்பதுவே எங்கள் செய்கையாம்.


படிப்பகம்

www.padippakam.com




படிப்பகம்

www.padippakam.com

## பாசம்

பாலன் என்ற பையனுக்குப்
பாட்டி பணம் தந்தாள்
பாலன் கடைக்கோடி வடை
வாங்கிக் கொண்டு வந்தான்.

*

கொண்டுவந்த வடையதனில்
கொஞ்சங்கிள்ளித் தின்றான்
கண்டதங்கை ஓடிவந்து
கையைநீட்டி நின்றாள்.

*

பங்கிடுவோன் போலதனைப்
பாதியாக்கிக் கொண்டான்
தங்கைக்கொரு பாதியென்று
சொல்லியொன்றை உண்டான்.

*

மற்றப்பங்கை வாங்குதற்குத்
தங்கைகரம் நீட்டப்
பற்றில்லாத பாலன் நீட்டிக்
கொடுக்கா தேய்த்துக் காட்ட

*

பையனது வஞ்சனையைப்
பார்த்தவொரு காகம்
கையைக் கீறிவடை யதனைக்
கௌவிக்கொண்டு போக

*

கையிற்காயம் கண்டுபாலன்
கண்கலங்கி நின்றான்
ஐயையோவென் றழுதுதங்கை
அவனைத்தேற்றி நின்றாள்.


படிப்பகம்

www.padippakam.com

## தேர்த் திருவிழா

சித்திரந் தீட்டியே சேலை விளங்கவே
சிங்காரத் தேரைந்து வீதியிலே
பக்தியுட னன்பர் பற்றி யிழுத்திடப்
பாகனில்லாமலே போகுதம்மா.

***

கான மயிலென்ற வாகன மேயது
காணாமற் சென்று மறைந்ததுவோ
ஏனம்மா கந்தக் கடவுளுந் தேரினில்
ஏறியே வீதியில் வாறாரம்மா.

***

கந்தக்கடவுள் ஒருவரென்றால் வீதிக்
காட்சிக்குத் தேரொன்று காணாதோ
சிந்தை மகிழ்ந்து களித்திட வேஜந்து
தேரின் கதையினைச் சொல்வாயம்மா.

***

நாலு பெரியதேர் கண்டேனம் மாமிக
நல்ல சிறுதேரும் ஒன்று கண்டேன்
பால வயதினிற் கோல முருகையன்
பாடி விளையாடுந் தேரதுவோ.

***

சின்னத்தேர் போலொரு தேரெனக்கு வேண்டும்
செய்து தருவாயோ சொல்வாயம்மா
வண்ணம் பலப்பல ஒட்டியென் பாவையை
வைத்து விளையாட வேணுமம்மா.

*

www.padippakam.com


படிப்பகம்

www.padippakam.com

Editor: S. Cathiresarpillai
Title: Kathiresanin Siruvar pádalkall
(Tamil children poems)
First edition: 1993
Publisher: Mrs. Puvaneswary Chathiresarpillai
Copyright: Mrs. Puvaneswary Chathiresarpillai
Priorensgade 32 . 1 th
5600 Faaborg
Denmark

நூல் ஆசிரியர்: அமரர் கவிஞர் - செ. கதிரேசர்பிள்ளை
தலைப்பு: "கதிரேசனின் சிறுவர் பாடல்கள்"
முதற்பதிப்பு: 1993
வெளியீடு: திருமதி - புவனேஸ்வரி கதிரேசர்பிள்ளை
உரிமை: திருமதி புவனேஸ்வரி கதிரேசர்பிள்ளை
Priorensgade 32. 1 th
5600 Faaborg
Denmark


படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்